# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 03 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

**வினாத்தொகுதி:01**

(i) கவிஞர் கூறவிளைந்த பேசுபொருளை(துறை)விளக்குக.

(ii) பாடலினூடாக தலைவியின் துயர் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக.

(iii) பாடலில் கையாளப்பட்ட உள்ளுறை உவமத்தை எடுத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:02**

(i) பாடல் வெளிப்படுத்தும் பிரதான செய்தியை எடுத்துக்காட்டுக.

(ii) பாடலில் புலவர் தம் கருத்தை வெளிப்படுத்த கையாளும் உத்திகளை எடுத்து விளக்குக.

(iii) பாடலில் துலங்கும் நெய்தல் நிலச் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:03**

(i) பாடலின் திணையையும் துறையையும் குறிப்பிட்டு விளக்குக.

(ii) தலைவியை தாழம்பூவாக புலவர் குறிப்பிட்டதன் பொருத்தப்பாட்டை ஆராய்ந்து குறிப்பிடுக.

(iii) தலைவியின் அழகு நலன்களாக பாடலில் குறிப்பிடப்படுவனவற்றை எடுத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:04**

(i) இப்பாடலில் மேல்வரும் சொற்கள் எவ்வெப் பொருள்களில் குறிப்பிடப்பட்டுள்ளன?

- விறல் வனப்பு
- தயங்கல்
- சேர்ப்பன்
- நகுதல்

(ii) "தயங்கு நிரை பொருத தாழை வெண்பூக் குருகு என மலரும்" எனும் தொடரின் ஊடாக சித்திரிக்கப்பட்ட விடயத்தை எடுத்துக்காட்டுக.

(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால அகத்திணைப் புண்புகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)